கருவூலக்கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
தமிழ்நாடு, சென்னை–35.

*****

முன்னிலை: திரு.க.விஜயேந்திரபாண்டியன், இ.ஆ.ப

மாவட்டக் கருவூலம் 06 OCT 2023 9930 திண்டுக்கல்

6.10.23

செ.மு.ந.க. எண்:43227/2022/சி3 நாள்.27.09.2023

| | |
|---|---|
| பொருள்: | பணியமைப்பு – கருவூலக்கணக்குத்துறை– திண்டுக்கல் மாவட்டக் கருவூல அலகு– திருமதி.செ.தீபா, இளநிலை உதவியாளர், மாவட்ட கருவூலம், திண்டுக்கல் –கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டது– பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடல் தொடர்பாக. |
| பார்வை: | 1.கருவூல அலுவலர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை எண்.8587/2018/அ1, நாள்.25.01.2021 |
| | 2.கருவூல அலுவலர், திண்டுக்கல் அவர்களின் கடித ந.க. எண்.11346/2021/அ1, நாள்.25.10.2022. |
| | 3.இவ்வாணையரக கடித ந.க. எண்.43227/சி3/2022, நாள்.01.03.2023 |
| | 4.அரசாணை (3ப) எண்.38 நிதி (க.க.2) த்துறை, நாள்.07.08.2023 |

*****

**ஆணை:**

கொடைக்கானல் சார்நிலை கருவூலத்தில் கூடுதல் சார்நிலைக் கருவூல அலுவலராக பணியாற்றி 21.08.2017 அன்று பணியிடை மரணமடைந்த திரு.த.விஜயகுமார் அவர்களின் மனைவி திருமதி.செ.தீபா என்பவர் கருவூலக் கணக்குத்துறையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்று மாவட்டக் கருவூலம், திண்டுக்கலில் 27.01.2021 மு.ப முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை–4–இல் காணும் அரசாணையில் தனியரது பணிவரன்முறை ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஒராண்டிற்கு மேலாகப் பணிபுரிந்து வரும்

திருமதி.செ.தீபா என்பவரின் தற்காலிகப் பணிநியமனமானது, இளநிலை உதவியாளர், பதவியில் திருப்தி அளிக்கு படியாக உள்ளதாலும், கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், திருமதி.செ.தீபா என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் தனியர் பணியேற்ற நாளான 27.01.2021 முற்பகல் முதல் அவர் அப்பதவிக்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முந்தேதியிட்டு பணிவரன்முறை செய்யபடுவதன் மூலம் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றை பெற தகுதியுடையவராகிறார்.

இவ்வாறு, தனியரின் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு கருவூலக்கணக்குத்துறை விதிகளின்படி, பணிவரன்முறை நாளான 27.01.2021 முதல் தகுதிகாண்பருவம் துவங்கி ஆணையிடப்படுகிறது. மேலும் தகுதிகாண்பருவம் துவங்கப்பட்டு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார். தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டிய தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதேனும் இருப்பின் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

க.விஜயேந்திரபாண்டியன்
கருவூலக் கணக்கு ஆணையர்.

பெறுநர்

1. திருமதி.செ,தீபா,
இளநிலை உதவியாளர்,
மாவட்டக கருவூலம்,
திண்டுக்கல்.
(உரிய வழிமுறையாக)

2. கருவூல அலுவலர்,
மாவட்டக்கருவூலம்,
திண்டுக்கல்.

3.இருப்புக்கோப்பு

// ஆணைப்படி அனுப்பலாகிறது //

கண்காணிப்பாளர்
29/9/2023

29/9/23